செய்தி வெளியீட்டு எண்.362 நாள்:30.4.2010

செய்தி வெளியீடு–30.4.2010

## அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் காகிதத் தொழில் சார்ந்த நூல்பிரிவு அமைத்திட தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 25 இலட்சம் ரூபாய் நன்கொடை!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் துணைமுதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

தமிழக அரசு சார்பில் சென்னை மாநகரில் மிகப் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுவரும் "அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகக்"கட்டடத்தில் காகிதத் தொழில் வரலாறு, காகித உற்பத்தி, தொழில்நுட்பம் சார்ந்த நூல்கள் கொண்ட தனிப்பிரிவு ஒன்றை அமைப்பதற்காகத் தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனம் 25 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கிட முடிவு செய்தது. அம்முடிவின்படி, 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று (30.4.2010) வழங்கினார். அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, தொழில்துறைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.முகமது நசீமுத்தின், இ.ஆ.ப., துணை மேலாண்மை இயக்குநர் திரு.அ.வெள்ளியங்கிரி மற்றும் உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.